5. அறிவிப்பு

தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12–30

7. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(ஆ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

(அ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013–2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பே அணிகலனாய்; ஆற்றலே நல் ஆயுதமாய்; இனிமை சொல் வடிவாய்; ஈகை பெருங்குணமாய்; உண்மையின் உயர் வடிவாய்; ஊக்கத்தின் மறு வடிவாய்; எளிமைக்கோர் இலக்கணமாய்; ஏற்றம் தரும் தமிழமுதாய்; ஒளிகாட்டும் சுடர்மதியாய்; ஓங்காரத்தின் ரீங்காரமாய்; தமிழ் உலகாளும் மகா சக்தியே; நாளைய பாரதத்தை ஆளும் பராசக்தியே; (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஏழேழு தலைமுறையும் தங்களுக்கு நன்றிக் கடன்பட்டிருப்போம் தாயே. எங்கள் தாயினும் மேலான அன்பு காட்டும் எங்கள் குல தெய்வமே! மாண்புமிகு தமிழ்நாடு